செ.வெ.எண்:24-2020 நாள்:15.06.2020

**விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கையாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.**

இன்று (15.06.2020) விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாக நுழைவு வாயிலில் தொடங்கி விழுப்புரம் இரயில் நிலையம் வரை நடந்து சென்று கடைவீதிகளில் பொதுமக்கள் சமூக இடைவெளியினை பின்பற்றி பொருட்கள் வாங்கிச்செல்வதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது சமூக இடைவெளியினை கடைபிடிக்காமல் மற்றும் அரசு அறிவித்த உத்தரவினை பின்பற்றாமல் குளிர் சாதன வசதியுடன் விற்பனை செய்த நான்கு கடைகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மூன்று நாட்கள் கடைகள் இயங்க தடைவிதித்தார். மேலும், மூன்று நாட்களுக்குள் கடைகளை கிருமி நாசினி கொண்டு நன்கு சுத்தம் செய்து பின்னர் கடைகள் இயங்க உத்தரவிட்டார்.

தொடர்ந்து சமூக இடைவெளியினை கடைபிடிக்காமல் வியாபாரம் செய்து வந்த வியாபாரிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் எச்சரித்தார்.

இந்த ஆய்வின் போது கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.சங்கர் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் ஊராட்சிகள் (பயிற்சி) திரு.சூர்யா, நகராட்சி ஆணையர் திரு.தட்சிணாமூர்த்தி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.